12 பாடம்

# ஆயத்தமா? இல்லையா?

***நீ மிகவும் ஆவலோடு எதிர்பார்த்த காரியம் உடனே நடைபெறாமல் இருந்தபோது உனக்கு எப்படி இருந்தது? இன்றைய வேதாகமப் பாடக்கதையில் மணவாளனுக்காகக் காத்திருந்த 10 கன்னிகைகளைக் குறித்துப் பார்ப்போமா?***

பத்துக் கன்னிகைகள் ஒன்றாக ஒரே வீட்டில் தங்கியிருந்தனர். அவர்களில் 5 பேர் புத்தியுள்ளவர்கள். 5 பேர் புத்தி அற்றவர்களாக இருந்தனர்.

ஒரு குறிப்பிட்ட நாளிலே அவர்கள் மணவாளனைச் சந்திக்கப்போக வேண்டியதாயிருந்தது. அந்தநாளிலே அவர்கள் தங்களது மற்ற வேலைகளை எல்லாம் விரைவாக முடித்தார்கள்.

தங்களை மிகவும் அழகுபடுத்திக்கொண்டு சிறப்பான உடையணிந்து கொண்டார்கள். மணவாளளைச் சந்திக்கத் தங்களை ஆயத்தப்படுத்திக் கொண்டனர்.



மணவாளனை எதிர்கொண்டு அழைக்கப் புறப்பட்ட அந்தப் பத்துக் கன்னிகைகளும் விளக்குகளைத் தங்கள் கைகளில் எடுத்துக்கொண்டார்கள்.

அவர்களில் புத்தியுள்ளவர்களாக இருந்த 5 கன்னிகளும் தங்கள் விளக்குகளுடன்கூட அதிகப்படியாக, விளக்கு எரியத் தேவையான எண்ணெயையும் எடுத்துக்கொண்டு போனார்கள். ஒருவேளை மணவாளன் வர சற்று நேரமாயிற்றென்றால் என்ன செய்வது என்று சிந்தித்துப் பார்த்தார்கள்.

எனவே, விளக்கு நீண்ட நேரம் நன்கு பிரகாசமாக எரிய வேண்டும் என்றே அதிகப்படியாக எண்ணெய் கொண்டு சென்றனர்.

ஆனால், புத்தியற்ற மற்ற 5 கன்னிகைகளும் தங்களது விளக்குகளை மட்டும் கொண்டு சென்றார்கள். அதிகப்படியான எண்ணெய்யை தங்கள் கையில் கொண்டுசெல்லவில்லை.

**மனன வசனம்**

**அவர் வரும் நாளையாவது நாழிகையையாவது நீங்கள் அறியாதபடியால் விழித்திருங்கள். மத்தேயு 25:13.**

மணவாளனைச் சந்திக்கவேண்டிய இடத்தில் அவர்கள் 10 பேரும் வந்துவிட்டனர். மணவாளன் வருகைக்காக மிகவும் ஆவலாகக் காத்து இருந்தனர். நேரம் சென்றுகொண்டே இருந்தது. ஆனால், மணவாளனோ இன்னும் வரவில்லை. அவர்கள் மிகவும் களைத்துப்போய்க் கொஞ்சநேரத்தில் நன்றாக அயர்ந்து தூங்கிவிட்டனர்.

திடீரென்று, ‘மணவாளன் வருகிறார்; அவரைச் சந்திக்க ஆயத்தமாகுங்கள்’ என்ற அறிவிப்புக் கேட்டது.

பத்துப்பேரும் துள்ளி எழுந்தனர். சற்றே கலைந்திருந்த ஆடைகளைச் சரி செய்துகொண்டனர். தங்களது விளக்குகளைத் தூண்டிப் பிரகாசமாக எரியச்செய்தனர்.

புத்தியுள்ள 5 கன்னிகைகளும் தாங்கள் கொண்டு வந்திருந்த எண்ணெயைத் தங்கள் விளக்குகளில் ஊற்றினர். இப்போது புத்தியுள்ள கன்னிகைகளின் விளக்கு நன்றாக எரிந்தது. ஆனால், புத்தியற்றவர்களின் விளக்குகளிலிருந்து தீபம் மங்கத் தொடங்கியது. அதைக் கண்ட அந்த 5 புத்தியற்றவர்களும் பதறினர். புத்தியுள்ள கன்னிகைகளிடம் தங்களுக்கும் கொஞ்சம் எண்ணெய் தருமாறு கெஞ்சினர்.

அப்போது, அந்தப் புத்தியுள்ள 5 பேரும், “உங்களுக்கு எண்ணெய் தந்தால் உங்களுக்கும் போதாமல், எங்களுக்கும் போதாமல் ஆகிவிடும். எனவே, நீங்கள் கடைகளில் சென்று வாங்கிக்கொள்ளுங்கள்” என்றனர்.

புத்தியற்ற 5 கன்னிகைகளும் அவ்வாறே அங்குமிங்கும் அந்த இரவுவேளையிலே எண்ணெய்க்காக அலைந்தனர். ஒருவழியாக எண்ணெய் வாங்கி விளக்கில் ஊற்றி வந்து சேர்ந்தபோது அந்த 5 புத்தியுள்ள கன்னிகைகளையும் காணவில்லை.



## செய்தி

**தேவனுடைய குடும்பதினர் இயேசுவின் வருகைக்காக எப்போதும் ஆயத்தமாயிருப்போம்.**

அதற்குள்ளாக மணவாளன் வந்துவிடவே அவர்கள் உள்ளே சென்றுவிட்டனர். இப்போது இந்தப் புத்தியற்ற 5 பேரும் மணவாளனின் அறைக் கதவை வேகமாகத் தட்டினர். மணவாளன் எட்டிப்பார்த்தார்.

கசங்கிய உடைகளோடும் கலைந்த தலையுடனும் காணப் பட்ட அந்தக் கன்னிகைகளைப் பார்த்தார். “நீங்கள் யார்? உங்களை எனக்குத் தெரி யாதே” என்று சொல்லிக் கதவை அடைத்துவிட்டார். அந்தக் கன்னிகைகள் மனம் நொந்தனர்.

அந்தப் புத்தியுள்ள 5 கன்னி கள்போல இவர்களும் ஆயத்த மாக இருந்திருந்தால் மனவாள னுடன் சென்றிருக்கலாம்.

***செய்முறை:*** **படத்தில் 10 விளக்குகள் கொடுக்கப்பட்டுள்ளன. எத்தனை விளக்குகளில் எண்ணெய் நிறைந்து இருந்ததோ அத்தனை விளக்குகளில் தீபம் ஏற்றி எரியவிடு. எண்ணையற்ற விளக்குகளை வேறுபடுத்திக் காட்டு.**

## புதிர் 12

